**செய்தி வெளியீடு எண்: 183** **நாள்: 05.03.2020**

**<u>இன்று (5.3.2020) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை:</u>**

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.**

**இந்த இனிய விழாவிற்கு வருகை புரிந்து**

தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர்
**திரு. ஓ.பன்னீர்செல்வம்** அவர்களே!

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே
சிறப்புரை வழங்கிய மாண்புமிகு மத்திய சுகாதாரத்துறை இணை அமைச்சர் திரு.அஷ்வினி குமார் சௌபே அவர்களே!

இம்மண்ணின் மைந்தர் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்
**திரு. P. தங்கமணி** அவர்களே!

மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை அமைச்சர்
**டாக்டர். V. சரோஜா** அவர்களே!

சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் **டாக்டர். சி.விஜயபாஸ்கர்** அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் திரு.பொள்ளாச்சி வி.ஜெயராமன் அவர்களே!

மாண்புமிகு தலைமைக் கொறடா திரு.எஸ்.ராஜேந்திரன் அவர்களே!

டெல்லி சிறப்புப் பிரதிநிதி, முன்னாள் அமைச்சர் திரு.தளவாய் சுந்தரம் அவர்களே!

முன்னாள் அமைச்சர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் கழகத் தலைவர்
திருமதி.பா.வளர்மதி அவர்களே!

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு. பி.கே.வைரமுத்து அவர்களே!

மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

மாவட்ட ஊராட்சித் தலைவர் அவர்களே!

முன்னாள் அமைச்சர் பெருமக்களே!

முன்னாள் துணை சபாநாயகர், முன்னாள் மத்திய அமைச்சர் திரு.தம்பிதுரை அவர்களே!

மிகச் சிறப்பாக இந்த நிகழ்ச்சிக்கு உறுதுணையாக விளங்கி, இன்று மத்திய அமைச்சர் அவர்கள் பேசியதை தமிழாக்கம் செய்த மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் செயலாளர் **டாக்டர் பீலா ராஜேஷ்** அவர்களே!

நன்றியுரை ஆற்றவுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்
**திரு. கே.மேக்ராஜ்** அவர்களே!

முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!

கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே!

பெரியோர்களே, தாய்மார்களே!

வியாபார பெருமக்களே! தொழிலாளர் நண்பர்களே!

கழக உடன்பிறப்புகளே!

பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் கடின உழைப்பால், நுண்ணறிவால் இம்மாவட்டத்தை தொழில்கள் நிறைந்த மாவட்டமாகவும், கல்வி நிறுவனங்கள் நிறைந்த மாவட்டமாகவும் மாற்றி அமைத்தவர்கள் இம்மாவட்ட மண்ணின் மைந்தர்களான நீங்கள் தான்.

இம்மாவட்டத்திற்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில், இன்று சிலுவம்பட்டியில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் அமைய உள்ள புதிய அரசு மருத்துவக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டு விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். நாமக்கல்லில், அரசு மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டும் என்ற நெடுநாளைய கோரிக்கை அம்மாவின் அரசால் இன்றையதினம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவிக்க விரும்புகின்றேன்.

உயரமான நாமகிரி **குன்றும்;** அதன் உச்சியில் தலையாக விளங்கும் **கோட்டையும்**; குகைக் **கோயிலும்**; கோயிலுக்கு முன்னால் விஸ்வரூபம் எடுத்து அருள்பாலிக்கும் **ஆஞ்சநேயரும்**; நாமக்கல் ராமலிங்கம் பிள்ளையின் நறுக்கான

**கவிதைகளும்**; நாமக்கல் மாவட்டத்தின் பெருமைகளுக்கு அடையாளங்களாக திகழ்கின்றன. **'நாமகிரி'** என்று அழைக்கப்பட்ட மிகப் பெரிய ஒற்றைப் பாறையைக் கொண்டுதான் **'நாமக்கல்'** என்ற பெயர் உருவானது. இங்கு அமையப்பெற்ற அழகிய கோட்டை அதற்கு மேலும் அழகு சேர்க்கின்றது.

12ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட **அரப்பளீஸ்வரர் ஆலயமும், ஆகாய கங்கை அருவியும்,** கொல்லிமலையின் அழகை அதிகப்படுத்துகின்றன. இந்தக் கொல்லிமலை கடையேழு வள்ளல்களில் ஒருவரான **"ஓரி"** என்ற மன்னரால் ஆளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. சித்தர்களாலும், பக்தர்களாலும் போற்றப்படும் திருச்செங்கோடு **அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில்** நாமக்கல் மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற திருக்கோயில்.

மலைகளாலும், குன்றுகளாலும் சூழப்பட்ட இம்மாவட்டத்தில், மக்கள் விவசாயத்தை மட்டுமே நம்பியிராமல், கோழிப் பண்ணைகள் மூலம் தமிழ்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு துணை நிற்கிறார்கள். தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த முட்டை உற்பத்தியில் 90 விழுக்காட்டை பூர்த்தி செய்வது நாமக்கல் மாவட்டம், இந்தியாவின் முட்டை உற்பத்தியிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது. அதுமட்டுமல்லாமல், லாரி தொழில்கள் நிறைந்த, சுமார் 60,000–க்கும் மேற்பட்ட லாரிகளைக் கொண்டது நாமக்கல் மாவட்டம். டேங்கர் லாரிகள் அதிகமாக உள்ள மாவட்டம். மேலும், ஆழ்துளைக் கிணறு அமைக்கும் ரிக் இயந்திரங்கள் இந்த மாவட்டத்தில் தான் மிக அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. நாமக்கல் மாவட்டம் சிறந்த தொழிற்பகுதியாக உருவாகியுள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது. ஜவுளி, ஜவ்வரிசி உற்பத்தி செய்கின்ற மாவட்டம். இவ்வாறு தொழில் வளங்கள் மிக்க மாவட்டமாக திகழ்கின்ற மாவட்டம், தமிழ்நாட்டிலேயே நாமக்கல் மாவட்டம் தான் என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

உயர்தர சுகாதார சேவைகளை வழங்குவது மட்டுமல்லாமல், மிகச் சிறந்த மனிதவளம் மற்றும் கட்டமைப்பை ஏற்படுத்துவதில் தமிழ்நாடு ஒரு முன்மாதிரி

மாநிலமாக விளங்கி வருகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

தமிழகத்தில் தான் அதிகளவில் மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே 6 புதிய மருத்துவக் கல்லூரிகளைக் கொடுத்தார்கள். அம்மா அவர்களின் மறைவிற்குப் பிறகு அம்மா வழியில் செயல்படும் அரசு, ஒரே ஆண்டில் 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளை தமிழ்நாட்டிற்குப் பெற்றுத் தந்து பெருமை சேர்த்துள்ளது. 2011 வரை தமிழகத்திலே 1945 இடங்கள் தான் புதிதாக மருத்துவம் படிக்கக்கூடிய சூழ்நிலை இருந்தது. இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற வரை கூடுதலாக சுமார் 885 இடங்களை அதிகமாக உருவாக்கினார்கள். அம்மா மறைவிற்குப் பிறகு அம்மா வழியிலே வந்த அம்மாவினுடைய அரசு கடந்த ஆண்டு கூடுதலாக 350 இடங்களுக்கு மத்திய அரசிடமிருந்து அனுமதி பெற்று தந்தது. மேலும், தற்போது 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் உருவாக்கியதன் மூலமாக 1650 மருத்துவ இடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. ஆக மொத்தம், 2000 மருத்துவ இடங்களை புதிதாக மாண்புமிகு அம்மாவினுடைய அரசு உருவாக்கியிருக்கிறது. இந்த புதிய மருத்துவக் கல்லூரியை வழங்கிய மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்களுக்கும், மாண்புமிகு மத்திய சுகாதார அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மத்திய சுகாதார இணை அமைச்சர் அவர்களுக்கும் நாமக்கல் மாவட்டத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, தமிழ்நாட்டில் 11 புதிய மருத்துவக் கல்லூரிகளை உருவாக்குவதற்கு அனுமதி வழங்கியமைக்காக மத்திய அரசுக்கு தமிழ்நாட்டு மக்களின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த அரசு என்ன செய்தது என்று பலர் கேட்கின்றனர். இவ்வளவு பெரிய சாதனையை நாங்கள் சாதித்திருக்கின்றோம். எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலர், இந்த புதிய மருத்துவக் கல்லூரிகளினால் வெளி மாநிலத்தவர்கள் தான் இங்கே வந்து படிப்பார்கள் என்ற தவறான செய்தியை பரப்பி வருகிறார்கள், அது அவ்வாறு அல்ல. தமிழகத்தில் உள்ள மொத்த மருத்துவ இடங்களில் 15 சதவிகிதம் மட்டுமே அகில இந்திய ஒதுக்கீடு (All India Quota), மீதமுள்ள 85 சதவிகிதம் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவ, மாணவியருக்குத்தான். அதுமட்டுமல்லாமல், அகில இந்திய ஒதுக்கீடான 15

சதவிகிதத்திலும் நம் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவ, மாணவியர் மருத்துவப் படிப்பிற்கான இடம் பெற முடியும் என்பதையும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த நண்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாய்–சேய் நலம் மற்றும் குடும்ப நலத் திட்டங்களையும், நோய்களை தடுப்பதற்காகவும் பல முன்னோடி திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு திறம்பட செயல்படுத்தி வருகிறது. இதன் காரணமாக, இந்தியாவில் மட்டுமல்லாமல், உலகிலேயே உயரிய மருத்துவ சேவை பெற வசதியுள்ள இடமாக தமிழ்நாடு மாநிலம் திகழ்கிறது என்பதை பெருமையுடன் தெரிவிக்க விரும்புகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் வெளியிடப்பட்ட '**தொலை நோக்குத் திட்டம் 2023**'–ல், வளர்ந்த நாடுகள் அடைந்த சுகாதாரக் குறியீடுகளை, 2023ஆம் ஆண்டுக்குள் அடைய வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது, அதற்கான முயற்சியை அம்மாவினுடைய அரசு எடுத்து வருகிறது. பேறுகாலங்களில், தாய்மார்கள் இறப்பு விகிதம், குழந்தை இறப்பு விகிதம் போன்ற சுகாதார குறியீடுகளில் ஐக்கிய நாடுகளின் மில்லினியம் வளர்ச்சி இலக்குகளை நமது மாநிலம் ஏற்கனவே அடைந்து விட்டது. தமிழ்நாட்டில் மருத்துவர்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும் என்பதில், மாண்புமிகு அம்மாவின் அரசு மிகுந்த அக்கறை கொண்டு செயல்பட்டதினால், கடந்த 8 ஆண்டுகளில் நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல 6 மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. மேலும், இந்த நிதியாண்டில் மட்டும், புதியதாக 11 மருத்துவக் கல்லூரிகள் மத்திய அரசின் நிதி உதவியோடு தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டு, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா முதலமைச்சராக இருந்த காலத்திலிருந்து இன்று வரை 17 மருத்துவக் கல்லூரிகளை உருவாக்கிய அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு.

பொன்மனச்செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் நூற்றாண்டு விழாவில் நான் வெளியிட்ட பல்வேறு அறிவிப்புகள் ஒவ்வொன்றாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

மோகனூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டாட்சியர் அலுவலகம் உருவாக்கப்படும் என்று சொன்னேன், இப்பொழுது அது உருவாக்கப்பட்டுள்ளது என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கண்ட கனவான நீர் மேலாண்மைத் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று கருதி மாண்புமிகு அம்மாவினுடைய அரசு குடிமராமத்துத் திட்டம் என்ற திட்டத்தை தமிழகத்தில் தொடங்கி, வெற்றிகரமாக செயல்படுத்தி கொண்டிருக்கிறது. நாமக்கல் மாவட்டத்தில் கடந்த மூன்று, நான்காண்டு காலமாக பருவமழை சரியாக பொழியாத காரணத்தினால் வறட்சியான பகுதியாக உள்ளது. இதுபோன்ற வறட்சியான பகுதிகளிலுள்ள நீர்நிலைகளான குளங்கள், குட்டைகள், ஏரிகள், ஊரணிகள் ஆகியவற்றை செப்பனிட்டு, சீர் செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்து, முழுக்க, முழுக்க வேளாண் பெருமக்களின் பங்களிப்போடு குடிமராமத்துத் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். இதனால், பருவ காலங்களில் பொழிகின்ற மழை நீர், ஒரு சொட்டு கூட வீணாகாமல் சேமிக்கப்பட்டு, நிலத்தடி நீர் உயர்ந்து, குடிப்பதற்கும், விவசாயத்திற்கும் தேவையான நீர் கிடைக்கின்றது. இத்திட்டத்தின் மூலம், ஏரிகளிலிருந்து கிடைக்கும் வண்டல் மண் விவசாயிகளுக்கு இயற்கை உரமாகப் பயன்படுகிறது. இப்படிப்பட்ட உன்னதமான, அற்புதமான திட்டத்தை வழங்கிய அரசு அம்மாவினுடைய அரசு என்பதை மகிழ்ச்சியுடன் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்திட்டத்தின், மூன்றாண்டு காலத் திட்டமாக, ஓடைகள், நதிகளின் குறுக்கே தடுப்பணை கட்டப்படும் என்று அறிவித்து ரூபாய் 650 கோடி மதிப்பீட்டில் தடுப்பணைகள் கட்டும் பணிகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. காவிரியாற்றின் குறுக்கே கதவணைகள் கட்டப்பட்டு வீணாகக் கடலில் சேர்கின்ற நீரை தடுத்து நிறுத்தி விவசாயிகளுக்கு, பொதுமக்களுக்குத் தேவையான நீரை வழங்குவதற்கு எங்களுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்களும், கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் அவர்களும், இரு மாவட்டங்களைச் சேர்ந்த சட்டமன்றப் உறுப்பினர்களும் கோடை காலங்களில் தண்ணீர் இல்லாமல் காவேரி ஆறு வறண்டு விடுவதன் காரணமாக ஏற்படும் தண்ணீர் தட்டுப்பாட்டை நீக்க

நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று என்னிடத்தில் கோரிக்கை வைத்தனர். அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றும் விதமாக கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், நஞ்சைப் புகழூர் கிராமத்தில் காவேரியாற்றின் குறுக்கே கதவணை கட்டும் திட்டத்திற்கான விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது, அந்தப் பணியும் விரைவாகத் தொடங்கவுள்ளது. விரைவில் நாமக்கல் மாவட்ட மக்களுக்கு எப்பொழுதும் தண்ணீர் கிடைக்கக்கூடிய சூழ்நிலையை நாங்கள் உருவாக்கித் தருவோம்.

கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், நெரூர் கிராமம் மற்றும் நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், ஒருவந்தூர் கிராமம் அருகே காவேரியாற்றின் குறுக்கே கதவணை கட்டும் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள ரூபாய் 25 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஆய்வுப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அப்பணிகள் முடிகின்றபொழுது அங்கும் ஒரு கதவணை கட்டப்படும். அதன்மூலம் இந்தப் பகுதி மக்களுக்குத் தேவையான நீர் கிடைக்க எங்களுடைய அரசால் நடவடிக்கை எடுத்து வருகிறது என்ற செய்தியை தெரிவிக்க விரும்புகின்றேன்.

இன்றைக்கு மாண்புமிகு அம்மாவினுடைய அரசுதான் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. நான் அண்மையிலே 110–விதியின் கீழ் அறிவித்தேன். முதலமைச்சர் அவர்கள் சிறப்பு குறைதீர்க்கும் திட்டம் அற்புதமான திட்டம். தமிழ்நாடு முழுவதும் மூன்றே மாதங்களில் நிறைவேற்றப்பட வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உத்தரவிட்டு, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் விரைவாக செயல்பட்டார்கள். அதன் விளைவாக தமிழ்நாடு முழுவதும் 5 லட்சம் நபர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கப்படும் என்ற அறிவிப்பு கொடுத்து, பெரும்பாலான மாவட்டங்களில் பல ஆண்டுகாலமாக காத்திருந்த முதியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டது. அதன் மூலமாக மக்கள் அரசை நாடி மனு கொடுப்பதற்கு பதிலாக அதிகாரிகளே நேரடியாக சென்று மக்களிடமிருந்து மனுக்களைப் பெற்று, குறைகளை தீர்த்து வைத்திருக்கிறார்கள். இந்த திட்டத்தின் மூலம், நாமக்கல் மாவட்டத்தில் 24,047 மனுக்கள் பெறப்பட்டு, அதில் குறிப்பாக சொன்னால், முதியோர் ஓய்வூதியம் கேட்டு மனு செய்தவர்களுக்கு மூன்றே மாதங்களில், 6,581 முதியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கு ஆணை பிறப்பித்த அரசு அம்மாவினுடைய அரசு.

பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினி, விலையில்லா சைக்கிள், விலையில்லா புத்தகம், நோட்டு, காலணி போன்ற பல பொருட்கள் கொடுத்து இன்றைக்கு கல்வி கற்பவர்களின் எண்ணிக்கை தமிழகத்தில் உயர்ந்திருக்கிறது. இந்தியாவிலேயே உயர்கல்வி படிக்கின்றவர்களில் முதல் மாநிலமாக விளங்குவது தமிழ்நாடு தான்.

அதேபோல விவசாயிகளுக்கு உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் மூலமாக 17,658 விவசாயிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000 ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தையும் அம்மாவினுடைய அரசு தான் நிறைவேற்றியிருக்கிறது.

முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின் மூலம் இந்த மாவட்டத்தில் மட்டும் 64,316 நபர்கள் மாதந்தோறும் ரூ.1000 பெற்று பயனடைகின்ற நிலையை உருவாக்கிய அரசு எங்களுடைய அரசு என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களெல்லாம் இந்த ஆட்சியில் என்ன திட்டம் நிறைவேற்றப்பட்டது என்று கேட்கிறார்கள்? இந்த மாவட்டத்தில் மட்டும் பல திட்டங்களை நாங்கள் நிறைவேற்றியிருக்கின்றோம்.

பள்ளிப்பாளையத்தையும், ஈரோட்டையும் இணைகின்ற பாலம் ரூபாய் 26 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றியிருக்கின்றோம்.

பள்ளிப்பாளையம் எஸ்.பி.பி.காலனி ரயில்வே மேம்பாலம் 44 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பயன்பாட்டிற்கு கொண்டு வந்திருக்கின்றோம்.

திருச்செங்கோடு–நாமக்கல் சாலையை ரூ.126 கோடி மதிப்பீட்டில் சாலையை அகலப்படுத்தி, விபத்தில்லா சாலையாக உருவாக்கியிருக்கிறோம்.

மோகனூர் – நாமக்கல் சாலையை ரூபாய் 80 கோடி மதிப்பீட்டடில் சீர்செய்து அகலப்படுத்தியிருக்கின்றோம். திருச்செங்கோடு–பரமத்தி சாலையை ரூபாய் 146 கோடி மதிப்பீட்டில் அகலப்படுத்தி அற்புதமான சாலையாக வடிவமைத்துக் கொடுத்திருக்கின்றோம்.

ரூபாய் 295 கோடி மதிப்பீட்டில் மல்லியக்கரையிலிருந்து இராசிபுரம் வழியாக திருச்செங்கோடு செல்லும் சாலை உருவாக்கப்பட்டுள்ளது.

திருச்செங்கோடு சுற்றுச்சாலை அமைப்பதற்கு நிலம் எடுக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நாமக்கல் புறவழிச்சாலை அமைப்பதற்கும் நிலம் எடுக்கின்ற பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விரைவாக நிலம் எடுக்கும் பணி முடிந்தவுடன் சாலை அமைக்கும் பணி தொடங்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நாமக்கல்லில் இருந்து திருச்சி செல்கின்ற சாலையை 4 வழிச்சாலையாக அகலப்படுத்த வேண்டுமென்று மத்திய அரசிற்கு கோரிக்கை வைத்திருக்கின்றோம். அது மத்திய அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அந்த சாலையையும் விரிவுபடுத்துவதற்குண்டான நடவடிக்கையை எங்களுடைய அரசு தொடர்ந்து மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல கோதாவரி—காவேரி இணைப்புத் திட்டத்தை ஒரு கனவுத் திட்டமாக எங்களுடைய அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா இருக்கின்றபொழுதே இந்த திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று முயற்சி செய்தார்கள். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அம்மா மறைந்த பிறகு, அம்மா வழியிலே செயல்படும் இந்த அரசால் அந்த திட்டம் 100—க்கு 100 சதவிகிதம் உறுதியாக நிறைவேற்றப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகின்றபொழுது, நமக்குத் தேவையான நீர் கோதாவரியிலிருந்து நமக்குக் கிடைக்கும். ஆகவே, தமிழகத்தை என்றைக்கும் தண்ணீர் பிரச்சினை இல்லாத ஒரு மாநிலமாக உருவாக்குவதற்கு எங்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும். இதன் மூலமாக வறண்ட பகுதிகளுக்கு தண்ணீர் எடுத்துச் சென்று அந்தப் பகுதிகளையும் செழிப்பான பகுதிகளாக உருவாக்கப்படும்.

இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா இருக்கின்றபொழுதே திருமணிமுத்தாறு திட்டம் ஆரம்பிக்கப்படும் என்று சொன்னார்கள். இது நாமக்கல், திருச்செங்கோடு, சேலம் மாவட்டங்களுக்கு ஒரு வரப்பிரசாதமான திட்டம். ஆகவே, மேட்டூர் அணை நிரம்புகின்றபொழுது, உபரியாக வெளியேறுகின்ற நீரை திருமணிமுத்தாறில் திருப்பிவிடப்பட்டு, நாமக்கல் மாவட்டத்தை சிறப்பான பகுதியாக உருவாக்குவதற்கு எங்களுடைய அரசு ஆய்வுப் பணியில் ஈடுபட்டு இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதல் கட்டமாக, நேற்றைய தினம் மேட்டூர் அணையின் வெள்ள உபரி நீரை சேலம் மாவட்டத்தில் சரபங்கா வடிநிலத்தில் உள்ள 100 வறண்ட ஏரிகளுக்கு நீரேற்று மூலம் நீர் வழங்கும் திட்டத்திற்கு பூஜை போட்டோம். மேட்டூர், ஓமலூர், சங்ககிரி, எடப்பாடி சட்டமன்றத் தொகுதிகளில் இருக்கின்ற 9 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 100 வறண்ட ஏரிகளில் 565 கோடி ரூபாய் செலவில் தண்ணீர் நிரப்பும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அதேபோல, நாமக்கல் வறண்ட மாவட்டமாக இருக்கின்றது. இந்தப் பகுதிக்கும் தண்ணீரைக் கொண்டு வந்து, ஒரு செழிப்பான பகுதியாக நிச்சயமாக நாங்கள் உருவாக்குவோம்.

இந்த மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் மரியாதைக்குரிய சகோதரர் தங்கமணி அவர்களும், மரியாதைக்குரிய சமூக நலத் துறை அமைச்சர் திருமதி.சரோஜா அவர்களும், சட்டப்பேரவை உறுப்பினர்களும், இங்கே இருக்கின்ற நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த நிர்வாகிகளும், பொதுமக்களும் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அதை நிறைவேற்றுகின்ற விதமாக நாமக்கல் மாவட்டத்திற்கு சில அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்.

## அறிவிப்புகள்

1. மல்லசமுத்திரம் மற்றும் எலச்சிபாளையம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளுக்கு உட்பட்ட 712 குக்கிராமங்களைச் சேர்ந்த இரண்டு லட்சம் மக்கள் பயன் பெறும் வகையில், ஒரு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

2. பள்ளிபாளையம் காவேரி ஆற்றின் குறுக்கே 60 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட ஈரோடு மற்றும் நாமக்கல் மாவட்டங்களை இணைக்கும் தற்போது உள்ள பழைய பாலத்திற்கு மாற்றாக, 45 கோடி ரூபாய் மதிப்பில் ஒரு புதிய உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.

3. குமாரபாளையம், பள்ளிபாளையம் நகராட்சிகள் மற்றும் பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த மக்களின் நலன் கருதி, பள்ளிபாளையத்தினை தலைமையிடமாகக் கொண்டு புதிய காவல் உட்கோட்டம் அமைக்கப்படும்.

4. நாமக்கல்லில், புதிய ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் துறை அலுவலகக் கட்டடம் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

5. நாமக்கல் நகராட்சி, கொசவம்பட்டி ஏரியை தூய்மைப்படுத்தி, பொழுதுபோக்கு வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும். அதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

6. தேர்வுநிலை நகராட்சியாக உள்ள நாமக்கல் நகராட்சி, சிறப்புநிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்படும்.

7. தற்போது மிகவும் பழைய கட்டடத்தில் இயங்கிவரும் பரமத்தி மற்றும் எலச்சிபாளையம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு சுமார் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடம் கட்டப்படும்.

8. இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில், கொல்லிமலை ஆகாய கங்கை நீர்வீழ்ச்சி அருகில் மரபியல் மற்றும் பல்லுயிர் பூங்கா (Heritage-cum-Biodiversity Park) உருவாக்கப்படும்.

9. திருச்செங்கோடு – குமாரபாளையம் சாலையில் காவேரி ஆர்.எஸ். மற்றும் ஆனங்கூர் ரயில் நிலையங்களுக்கு இடையில் ரயில்வே உயர்மட்டப் பாலம் கட்ட விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொண்டு,

அதேபோல மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள் ராசிபுரம் சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்றார். இந்த ஆண்டு போதிய மழை இல்லாத காரணத்தினாலே அந்தப் பகுதியில் குடிநீர் பிரச்சனை இருக்கின்றது. குடிநீர் பிரச்சனையை தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதுவும் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**முத்திரை பதித்த மூன்று ஆண்டு,**

**முதலிடமே அதற்கு சான்று**

என்று பல விருதுகளை குவித்து வருகின்ற அரசு அம்மாவினுடைய அரசு.

இதைக் கூறுகின்ற போது, எனக்கு கதை ஒன்று நினைவுக்கு வருகிறது.

ஒரு கிளிக்கு இரண்டு கிளிப்பிள்ளைகள் இருந்தன. தாய் கிளி இரை தேட வெளியில் சென்றபோது, அங்கு வந்த வேடன் ஒருவன் அந்த இரண்டு கிளிப்

பிள்ளைகளை கூடையில் எடுத்துச் சென்று விட்டான். வழியில், இரண்டு கிளிப் பிள்ளைகளும் வெவ்வேறு இடங்களில் கூடையிலிருந்து நழுவி கீழே விழுந்து விட்டன. அதை அவன் கவனிக்கவில்லை. அந்தப் பக்கம் வந்த **ஒரு நல்லவன்** கீழே விழுந்த ஒரு கிளிப்பிள்ளையை எடுத்துச் சென்று வளர்த்து வந்தான். மற்றொரு கிளிப்பிள்ளையை, **கெட்ட குணமுடைய ஒருவன்** எடுத்துச் சென்று அதைத் தன் வீட்டில் வளர்த்து வந்தான். இது நடந்து ஒருசில மாதங்களுக்குப் பிறகு, ஒரு அரசன் அந்தக் கெட்டவன் வாழ்ந்த பகுதிக்கு வந்தான். அப்பொழுது அரசனது குதிரை கட்டுக்கடங்காமல் தறி கெட்டு ஓடியது. அதனால் தன் பரிவாரத்தை விட்டுப் பிரிந்த மன்னன், அந்தக் **கெட்டவன் வீட்டுக்கு** வந்து சேர்ந்தான். அரசன் வந்ததைக் கண்ட அங்கிருந்த கிளிப்பிள்ளை, “**ஐயோ! யாரோ ஒருவன் குதிரை மீது வருகிறான். அவனைப் பிடித்துக் கட்டுங்கள், வெட்டுங்கள்**” என்று பெருங்குரலெடுத்து கத்தியது. அதைக் கேட்ட அரசன், பயந்து போய், தன் குதிரையை வேறு பக்கம் ஓட்டினான். அது **நல்லவன் வாழும் வீட்டை** அடைந்தது. அங்கிருந்த கிளிப்பிள்ளையும் அரசன் வருவதை பார்த்தது. உடனே, “**வாருங்கள், வாருங்கள் தங்கள் வரவு நல்வரவு ஆகுக! தயவு செய்து இங்கு தங்கி இளைப்பாருங்கள். எங்கள் பணிவிடைகளை ஏற்றுக் கொள்ளுங்கள்**” என்று உரக்கக் கூறி அரசனை வரவேற்றது.

இது கண்ட அரசன், அளவற்ற ஆச்சரியம் அடைந்தான். இந்த இரு கிளிப் பிள்ளைகளுக்கும் இடையே இத்தகைய வேறுபாடு இருப்பதற்கு காரணம் என்ன என்று சிந்தித்தான். உடனே அக்கிளிப் பிள்ளையைப் வளர்த்த நல்லவனைப் பார்த்து, “இந்தப் பகுதியில் மற்றொரு வீட்டில் வேறு ஒரு கிளிப்பிள்ளையை பார்த்தேன். அது என்னைக் கண்டதும், குத்து, வெட்டு என்று கத்தத் தொடங்கி விட்டது. அது ஏன் அப்படி பேசிற்று” என்று கேட்டான் அரசன்.

நல்லவரும், கிளிப்பிள்ளைகளின் கதையை சொல்லத் தொடங்கினார். “இந்த இரண்டு கிளிப்பிள்ளைகளுமே உடன் பிறந்தவர்கள். இந்த கிளிப்பிள்ளையை எடுத்து நான் வளர்தேன். மற்றொன்றை கொண்டுபோய் இன்னொருவன் வளர்த்தான். அவன் கெட்ட குணம் உடையவன். இப்படி கிளிப்பிள்ளைகள் இரண்டும், வெவ்வேறு சூழ்நிலையில் வளர்ந்ததே இந்த வேறுபாட்டிற்கு காரணம்” என்றார். வளர்ப்பும்,

பயிற்சியுமே, இவ்விரு கிளிப்பிள்ளைகளையும் எவ்வாறு மாற்றி இருக்கின்றன என்று எண்ணி வியந்தான் மன்னன்.

நல்லவர் வளர்த்த கிளிப் பிள்ளை போல் எங்கள் இயக்கம் பேரறிஞர் அண்ணா அவர்களை வழிகாட்டியாகக் கொண்டு, புரட்சித் தலைவர் அவர்களால் உருவாக்கப்பட்டு, புரட்சித் தலைவி அம்மா அவர்களால் வளர்க்கப்பட்ட இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக இயக்கம்.

நாங்கள் **செய்வதைத் தான் சொல்வோம். சொல்வதைத் தான் செய்வோம்.** சில சமயங்களில், மக்கள் நலன் கருதி, **சொல்லாததையும் செய்வோம்** என்று கூறி, இந்த இனிய விழாவில் இம்மாவட்ட மக்கள் பயன் பெறும் வகையில், நான் பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறேன் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி அடிக்கல் நாட்டு விழாவிற்கு மிகச் சிறப்பாக ஏற்பாடுகளை செய்த மரியாதைக்குரிய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சகோதரர் டாக்டர் விஜயபாஸ்கர் அவர்களுக்கும், அவரோடு துணைநின்ற அத்துறையைச் சேர்ந்த மக்கள் நல்வாழ்வுத் துறை செயலாளர் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், வருவாய்த் துறை அதிகாரிகளுக்கும், பொதுப்பணித் துறை அதிகாரிகளுக்கும் என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி! வணக்கம்.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**